# வாழ்வதைத்தேடி...



மு.ஆ.சுமன்

# வாழ்வுதனைத் தேடி...

மு.ஆ.சுமன்

வெளியீடு
சுகந்தினி வாசம்

நூல் : வாழ்வுதனைத் தேடி ... (கவிதைகள்)

ஆசிரியர் :- மு.ஆ.சுமன்

உரிமை :- மு.ஆனந்தராசா ஆ.சந்திரமதி

முதற்பதிப்பு :- புரட்டாதி 2008

வெளியிடுவோர் முகவரி :- 'சுகந்தினி வாசம்'
எ.ஜி.ஏ லேன்,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

அச்சுப்பதிப்பு :- மதுரன் கிறாஃபிக்ஸ், & ஒவ்செற் பிறின்ரேர்ஸ், அல்வாய்.

அட்டை ஓவியம், வடிவமைப்பு :- கலைஞர் இ.சி.சுந்தரலிங்கம்

விற்பனை உரிமை :- ஆசிரியருக்கே

## பிரதேச செயலரின் ஆசிச்செய்தி

வாழ்வினைத் தேடி என்ற மனதைத் தொடும் கவிதைத் தொகுப்பினை மலராக வெளியிடும் இளங்கவிஞன் செல்வன் ஆ.சுமன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதமடைகின்றேன்.

ஒரு கவிஞனுக்குரிய தகுதி அவரின் எழுத்தின் கனதியிலும் எடுத்தாளும் விசயங்களின் விசாலத்திலுமே தங்கியிருக்கின்றது. ஒரு கவிஞனுடைய படைப்பில் காணப்படும் உருவமும் உள்ளடக்கமுமே அக்கவிஞனது முகத்திற்கும் முகவரிக்கும் கட்டியம் கூறுகின்றது.

அந்தவகையில் "வாழ்வினைத்தேடி" எனும் கவிதைத் தொகுப்பின் ஆசிரியரின் எண்ணங்கள், சிந்தனைகள், உணர்வுகள் யாவற்றினதும் வெளிப்பாடாக இந்நூல் அமைந்துள்ளது எனின் அது மிகையல்ல. இவர் மாணவப்பருவத்தினனாக இருந்தும் கூட கவிதைத் துறையில் ஏற்பட்ட அதீத நாட்டம் காரணமாக பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் தனது ஆக்கங்களை அனுப்பி அவற்றை பிரசிக்க வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது கவிதைகள் ஒவ்வொன்றிலும் ஆளுமையின் ஆழ அகலங்கள் வெளிவிடப்படுகின்றன. மனித சிரத்தைகளையும் தேடலையும் உணர்த்தி நிற்கின்றன. இது இவரது வளர்ச்சியின் புதிய பரிமாணம்.

செல்வன் ஆ.சுமனுக்கு எனது நல்வாழ்த்துக்களும் நல்லாசிகளும் உரித்தாகட்டும்.

**இ.வரதீஸ்வரன்**
**பிரதேச செயலர்**
**வடமராட்சி வடக்கு**
**23.08.2008**

## பணி மேலும் தொடர என் ஆசி

வல்வை நகரிற்கு அறிவூட்டி சிறந்த வழிகாட்டலுடனும், கற்பித்தலுடனும் நன்மாணாக்கரை உருவாக்கி இந்நாட்டிற்கு வழங்கிக்கொண்டிருக்கும் யா/சிதம்பராக்கல்லூரியின் தரம் 13 கலைப்பிரிவு மாணவனால் வெளியிடப்படும் வாழ்வுதனைத் தேடி..... என்னும் மலரிற்கு ஆசிகள் வழங்குவதில் பெருமையடைகின்றேன். இம் மலரானது பல விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அதாவது வல்வை மண்ணின் சிறப்பு, சமுதாய மேம்பாட்டு கருத்துக்கள், தமிழன் படும் துயர், சீதனத்தால் பெண்கள் படும் அவத்தை என பல கருத்துள்ள அம்சங்களை உள்ளடக்கி வெளிவருகின்றது. இம்மலரானது இன்றைய வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு நல்ல சிந்தனையையும் அறிவையும் ஊட்டும் என்பது பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. இம் மாணவனின் பணி மென்மேலும் தொடர வேண்டுமென எனது ஆசிகளை தெரிவித்து பணிசிறக்க அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ. சோமசுந்தர தண்டபாணிகதேசிகர் J.P**
**பிரதம குரு! வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்**
**சிவாச்சார்ய பீடாதிபதி ! அகில உலக**
**சைவக்குருமார் சம்மேளனம்.**

## புது ஆக்கங்கள் புதுப்பொலிவு பெற என் ஆசி

ஒருவர் தன் கருத்தை வெளியிடவும் பிறர் கருத்தை தான் புரிந்து கொள்ளவும் மொழி கருவியாகச் செயலாற்றுகின்றது. எமது மொழியினூடாக பழந்தமிழ் இலக்கியங்களை உணர்வதோடு அடுத்த சந்ததிக்கு புதுப்புது ஆக்கங்களைப் படைத்தளிக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அந்த வரிசையில் எனது பிரத்தியேக மாணவன் செல்வன் ஆ.சுமன் “வாழ்வுதனைத் தேடி” என்ற படைப்பினை வெளியிடுகின்றார். மொழிப்பாட வளர்ச்சிக்கும் எதிர்கால மாணவனின் சிந்தனை விருத்திக்கும் இத்தகைய முயற்சி ஊன்றுகோலாக அமையும் என்பதில் ஐயமில்லை. படைப்பாற்றல் கருத்து, உணர்ச்சி, கற்பனை ஆகிய மூன்றையும் வளர்க்கின்றது.

மாணவன் மேலும் பல படைப்புக்களை உருவாக்கி மொழி ஆளுகையை வளர்க்க மனதார வாழ்த்துகின்றேன்.

**கி.துடராசா**
**(யா/உடுப்பிட்டி அமெரிக்கன்**
**மிஷன் கல்லூரி முன்னாள் அதிபர்)**

## வெற்றி பெற எனது இனிய வாழ்த்து

செல்வன் சுமனின் இவ்வாக்க முயற்சியானது இன்றைய தமிழ் இலக்கிய வளர்ச்சியில் முக்கியமானதாகும். இக்கவிதை தொகுப்பானது இம்மாணவனின் முயற்சியினால் ஆக்கப்பட்டுள்ளது. இன்றைய சமுதாயத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடி போல இக்கவிதைகள் ஆக்கப்பட்டுள்ளமை பாராட்டுதற்குரியது. இவரின் இக்கன்னிப்படைப்பானது ஏனைய மாணவர்களுக்கு முன்மாதிரியாகக் காணப்படுவதுடன் இவரின் எழுத்தாற்றலை மேலும் அதிகரிக்கக் கூடியதாக உள்ளது. இவரின் ஆக்கமுயற்சிகள் வெற்றி பெற எனது இனிய வாழ்த்துக்கள்.

**சி.மகேந்திரன்**
[அதிபர் யா/சிதம்பரக்கல்லூரி]

## கவிஞர் வல்வைச்சுமனுக்கு என் ஆசி

வல்வையில் உதித்த வன்மை முத்துக்களுடன் வல்வைச் சுமனின் கவி.... விதையும் கவி முத்தாகி முத்தாரமாக சூட்டப்படுகின்றது.

வல்லமையுள்ள வல்வை மண்ணின் கவிஞர் "வல்வைச்சுமனின்" வாழ்வுதனைத் தேடி... கவித் தொகுப்பு சிறுப்புற்று விழங்க அனைத்துக் கலைக்கரங்களும் ஏந்தி வாழ்த்த வேண்டுகின்றேன்.

**கலைஞர் இ.சி.சுந்தரலிங்கம்**

## அணிந்துரை

மாணவ நிலையில் கருக்கொள்ளும் உணர்வுகளும் ஆற்றல்களுமே வளர்ந்த பருவத்தில் கலை இலக்கிய வெளிப்பாடுகளாய் வெளிக்கிளம்புகின்றன. யா/வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் செல்வன் ஆ.சுமன் கவிதை எழுதுவதில் ஆர்வமுள்ளவர். இந்நூலில் பல்வேறு தலைப்புகளில் அவரின் கவிதைகள் காணப்படுகின்றன. அவர் எடுத்துக் கொண்ட பாடுபொருட்களில் அவரின் சமூகப்பார்வை நன்கு புலனாகின்றது. இது நல்லதோர் ஆரம்பம்.

கவிதை தீட்டத் தீட்டத்தான் துலக்கமுறும். சொற்சிக்கனமும் சந்தமும் கவிதைக்கு வளம் சேர்ப்பன. உள்ளத்திற் தோன்றும் படிமங்களை *(imagery)* வார்த்தையில் வடித்தல் இலகுவான காரியமன்று. ஆழ்ந்த வாசிப்பும் அழகுணர்திறனும் அனுபவங்களை ஒழுங்கமைக்கும் ஆற்றலும் படைப்பாற்றல் ஆளுமையை *(Creative Personality)* அகலிக்கச் செய்வன. கவிதையின் குறியீட்டுத்தன்மை அதன் சிறப்பம்சமாகும்.

கவிதைகளாக அவ்வப்போது எழுயவற்றைத் தொகுத்து நூலாக வெளியிடும் சுமனின் முயற்சி போற்றுதற்குரியது. சுமனின் எதிர்காலம் நன்கு துலங்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

கலாநிதி த.கலாமணி
சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்வியியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்



## இதய ஒலி

மு. ஆ. சுமன்

யா/சிதம்பரக் கல்லூரியில் தரம் 13 கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவனாகிய நான் இவ் "வாழ்வுதனைத் தேடி..." என்ற கவிதை நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இதற்கு முன்னதாக நான் எவ்வாறு இத்துறைக்கு வந்தேன் என்று கூற விரும்புகிறேன். அதாவது எனக்கு இயல்பாக கவிதை ஒன்றும் வரவில்லை. கடந்த ஒரு வருட காலமாகத்தான் இந்த ஆர்வம் ஏற்பட்டது. அது எவ்வாறு என்றால் நான் வழக்கமாக பாடசாலை நிகழ்வுகளில் கவிதைகள் பல வாசிப்பேன். அவ்வாறு வாசித்து பாராட்டுக்களையும் பெற்றேன். அவ்வேளையில் எமது பாடசாலை அதிபர் திரு அ.விஜயநாதன் அவர்கள் என்னை பாராட்டி விட்டு ஒன்றை கூறினார். "மற்றவர்களின் கவிதையை பார்த்து பேசுவதைவிட்டு நீயாக இயற்றி அதை கூறினால் நன்றாக இருக்கும்" என்று கூறினார். அவ்வேளையில் நான் சிந்தித்தேன் ஏன் என்னால் முடியாது? என்று வினாவை எழுப்பி தீர்வையும் கண்டேன். அதன் பின் முதன் முதலாக நானாக ஒரு கவிதையை எழுதி "வலம்புரி" நாளிதழுக்கு அனுப்பி வைத்தேன். அக்கவிதை பத்திரிகையில் பிரசுரமாகியது. அதனால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அதன் பின் உதயன், தினக்குரல் போன்ற பத்திரிகைகளிலும் எனது கவிதைகள் பிரசுரமாகியது. இவ்வாறே எனக்கு கவிதை எழுதுவதில் ஆர்வம் ஏற்பட்டது. அந்த வகையில் நான் எழுதும் கவிதைகளை ஓர் நூல் வாயிலாக வெளியிட விரும்பியே இந்நூலை வெளியிடுகிறேன். இந்நூல் இன்று வெளியிடப்படுகிறது என்றால் அதற்கு காரணம் என் பெற்றோர்களும் நண்பர்களுமே ஆகும். அத்தோடு இந்நூல் வெளிவருவதற்கு

காரணமான இரண்டு பேரைக் குறிப்பிடவேண்டும். அதில் ஒன்று கலைஞர் திரு.இ.சி.சுந்தரலிங்கம், அடுத்தது எமது கல்லூரி நூலகர் பா.பிரபாகரன். ஏனெனில் இந்நூலிற்கான செயற்பாடுகள் ஆரம்பித்ததில் இருந்து எனக்கு போதிய வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் பல்வேறு சிரமத்தின் மத்தியில் அதை சிரமமாக கருதாது அனைத்து உதவிகளையும் செய்த இவ் இருவருக்கும் எனது பெற்றோர் நண்பர்கள் அனைவருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். கலைஞர் இ.சி.சுந்தரலிங்கம் அவர்கள் இந்நூல் வெளிவருவதற்கு அனைத்து வேலைகளையும் செய்ததோடு நூலின் முகப்பினை மிளிரச் செய்ததோடு, ஆங்காங்கே கவிதைகளுக்கான படங்களையும் தந்தமைக்காக அவருக்கு என் மனமார்ந்த நன்றி கூறவேண்டியவனாகின்றேன். நூலினை அழகுற அச்சிட்டு அட்டையையும் வடிவமைத்த அல்வாய் மதுரன் கிறா(f)பிக்ஸ் அச்சகத்தாருக்கும் என் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

என்னால் வெளியிடப்படும் இச்சிறு முயற்சியான "வாழ்வுதனைத் தேடி" முழுக்க முழுக்க சமூகக் கருத்துக்களையும் தமிழரின் நிலையினையும் படம் பிடித்து காட்டுபவையாக இருக்கும் என நம்புகிறேன். இவ்வாறு நான் இந்த மிகச் சிறிய முயற்சியை எடுத்திருக்கின்றேன் என்றால் அதற்கு எனது பெற்றோர் நண்பர்கள் எமது பாடசாலையே காரணமாக அமையும் என்பதில் ஐயமில்லை. வீறு நடை கொண்ட சமுதாயத்தில் 90% ஆனவர்கள் கவிதைகளை படிப்பதில்லை. இருந்தும் ஏன் எழுதுகிறேன் என்றால் எஞ்சியிருக்கும் 10% ஆனவர்கள் படித்து பயன்பெறுவார்கள் என்ற நம்பிக்கையில்தான்.

மு.ஆ.சுமன்



## வல்வை முத்துமாரியம்மா

வல்வை நகர் மீது குடிகொண்ட
தாயே முத்துமாரியம்மா
எம்குறை தீர்க்க எழுந்தருளிய
தாயே முத்துமாரியம்மா
அற்புத வரலாற்றை கூறும்
தாயே முத்துமாரியம்மா
வேண்டி வரும் பக்தர்களை காத்தருளும்
தாயே முத்துமாரியம்மா
எழில் கொஞ்சும் வல்வையிலே வீற்றிருக்கும்
தாயே முத்து மாரியம்மா
தீயன அழித்து நல்லன செய்யும்
தாயே முத்துமாரியம்மா
காலமெல்லாம் உன் புகழ் மறவோம்
தாயே முத்துமாரியம்மா



## என் அம்மாவே...

பத்து மாதங்கள் மெழுகு வர்த்தி போல
உருக்கி உருக்கி என்னை
பாரிற்கு அவதரிக்கச் செய்தாய் – தோன்றியதும்
பாலூட்டி சீராட்டி வளர்த்தாய்.

தன்னை உரைத்து உரைத்து நறுமணம்
வீசச்செய்யும் சந்தணக் கட்டையம்மா நீங்கள்
இடர் வந்த போதெல்லாம் இடரென்று கருதாது
எம்மை வளர்த்த உத்தமி அம்மா நீங்கள்

இரவு, பகல் பாராது பாடுபட்டு என்னை சான்றோன்
ஆக்க நினைக்கும் அற்புத தீபம் அம்மா நீங்கள்
காலங்கள் மாறியது கற்பனை மாறியது
நீங்கள் என்மீது கொண்ட அன்பு மட்டும் மாறவில்லையே

அரிது அரிது மானிடனாய் பிறப்பது அரிது
அதனிலும் அரிது செவிடு, குருடு நீங்கிப் பிறத்தல்
அதனிலும் அரிது உன் வயிற்றில் பிறந்தது
என்று பெருமை கொள்கின்றேன் தாயே.

# இறைவா நீ வரவேண்டும்

அழகழகாய் அற்புதமாய்!
இயற்கைதனை படைத்த இறைவா!
எம் துயர் தீர்க்க
வரவேண்டும்!
சாதி வெறி பிடித்த மாந்தரை
அழித்து புதுயுகம்
படைக்க வரவேண்டும்!
அணுஅணுவாய் தமிழர் தாயகத்தை
அழிக்கும்!
கொடூர மாந்தரை அழிக்க
இறைவா நீ வரவேண்டும்!
தினம் தினம் விழிதனில்
கண்ணீர் அரங்கேறுகிறது.
கணத்துக்கு கணம் தமிழன்
சாவின் விழிம்பில்!
தத்தளிக்கிறான். இத்துயர்
போக்க நீ வரவேண்டும்!
கடல்தனில் கப்பலோட்டிய
காலம் சென்று
கண்ணீரில் கப்பலோட்டுகிறோம்.
தினம் தினம் “கிளைமோர்”
குண்டுகளால் சாவடைந்து
போகின்றோம்.
இவ்விடர் போக்க
இறைவா நீ வரவேண்டும்!

விஞ்ஞான விந்தை என்று
ஞாலமதை அழிக்கும்
மாந்தரை அழிக்க
இறைவா நீ வரவேண்டும்
தமிழெல்லாம் அழிந்துசென்று
“தமிங்கிலீஸ்” முளைவிடுகிறது.
இத்துயர்தனை போக்க
இறைவா நீ வரவேண்டும்
பகட்டுக்கு உணவளித்து
பணத்தினை பறைசாற்றும்
பார்புகழ் மக்களை அழிக்க
இறைவா நீ வரவேண்டும்!
இத்தனை தயரில் தினம் தினம்
செத்து மழயும் எமைக் காக்க
இறைவா நீ வரவேண்டும்!
இல்லையேல் !
நாம் செத்து மடிகின்றோம்.



## வல்வையிலேதான்!

அற்புத வரலாற்றைக் கூறும் வல்வை
முத்துமாரியம்மன் குடிகொண்டதும் வல்வையிலேதான்!
சரித்திரம் படைத்த சாதனை நாயகர்கள்
உதித்ததும் வல்வையிலேதான்!

உலகம் போற்றும் சாதனைக் கலைஞர்கள்
உருவெடுத்ததும் வல்வையிலேதான்!
“கின்னஸில்” இடம்பிடித்த ஆழிக்குமரன்
அவதரித்ததும் வல்வையிலே தான்!

அமெரிக்காவை வியக்கவைத்த
“அன்னபூரணி” உருவெடுத்ததும் வல்வையிலேதான்!
பொங்கிடும் கடலோரத்தில் தென்றலாய்
வீசும் பசுமையைக் கொண்டதும் வல்வையிலேதான்!

இன்பமெனும் ஊற்றெடுத்து இனிக்க இனிக்க
செந்தமிழ் பேசுவதும் வல்வையிலேதான்
தமிழன் என்று சொல்லி தலைநிமிர்ந்து நடக்கும்
வீர நாயகர்கள் தோன்றியதும் வல்வையிலேதான்!

# 75 ஆண்டு தமிழ் சினிமா

சிகரம் தொட்ட தமிழ்
சினிமாவின் எழுபத்தைந்து
ஆண்டு நிலைதான் என்ன?
ஆதியிலே மலர்ந்தது
ஊமைப்படம்!
மெல்ல மெல்ல காலம்
கடந்து பேசும் படமாகியது
தமிழ் சினிமா!
சிந்தனைதனிலே கவிகள் பாட
கருத்துக்களை கூற
யதார்த்த வாழ்வின் விழுமியங்களை
எடுத்துரைக்க.
"தமிழ் சினிமா" வித்திட்டது
கறுப்பு வெள்ளையாக ஓடிய
தமிழ் சினிமா வர்ணமாக
உருவெடுத்து
கருத்திற்கு மனங்கொடுத்து
வலுப்பெற்றது
மாட்டு வண்டிதனிலே சக்கரங்கள்
சுழன்று ஓடுவது போல
காலமும் வேகமும் ஓடியது
இடைக்கால நிலையை எட்டிய
தமிழ் சினிமா
தொழில் நுட்ப வசதிகளை
காவி வந்து தன்னகத்தே

திருப்புமுனையை ஏற்படுத்தி
யாதார்த்த வாழ்வை குறைக்க
கற்பனை வித்திட்டது.
சிந்தனைக் கவி மலருவது போல்
ஓர் உணர்வு! உணரப்பட்டது

கதைதனின் கருத்தை விட
கவர்ச்சி சினிமா களமாக
மாற கற்பனைகள் சற்று
மெருகூட்டப்பட
கலைஞர்களின் வருகை
அபரவீதமானது
சமூகத்தை சீர்படுத்த
கிளர்ந்த தமிழ் சினிமா
சீரழிவதைப் போல் உணர்வு ஏற்பட்டது
அப்படி இப்படி முட்டி மோதிய
தமிழ், சினிமா!
மிலேனியம் நூற்றாண்டில்
கால்பதித்தது
மிலேனியமதிலே தமிழ் சினிமா
பிரமிக்க, பிரமாண்டமாக
உருவெடுத்து
முழுக்க முழுக்க நம்பமுடியாத
கற்பனை மற்றும் கிரபிக்ஸ்
திகைக்க வைக்க
கறுப்பு வெள்ளை கால நடிகைகள்
மறைந்து
மும்பையில் இருந்து “கைக்குட்டை”
அளவு ஆடையோடு தமிழ்
தெரியாது வந்தனர்
தமிழ் சினிமாவுக்கு...!
வாலிபரை கொள்ளை கொள்ள

வந்த இந்த மாற்றம்
தமிழ் சினிமாவை சீரழிக்க
தமிழின் நிலையும்
கேள்விக்குறியாக மாறியது
பட பட என்ற சண்டைக்காட்சி
விறுவிறுப்பு பெற
படங்கள் மெகாஹிட்”
சாவின் விழிம்பில்
நிற்கும் தமிழ் சினிமா
சீரழிவின் சிகரத்தை எட்டி
இரண்டாயிரத்து எட்டில்
காலடிவைத்து
75 ஆண்டுகளை பூர்த்தி செய்தது
சோதனைகளை சந்தித்து
சாதனை கொண்ட தமிழ் சினிமா
மீண்டும் வேதனை எனும்
சோதனைக்குள் செல்கிறது
வரலாற்றில்.....!
தமிழ் சினிமா
இத்தனை மாற்ற மென்றால்!
இனிவரும் காலத்தில்
தமிழ் சினிமாவின்
நிலைதான் என்ன?
என்ன? என்ன?

## வரலாற்றில் சிதம்பரா....

எழில் கொஞ்சும் வல்வைதனிலே!
வல்வை மண் பெற்றெடுத்த
முத்து!
சிதம்பரப்பிள்ளை அவர்களால்
சிதம்பரக் கல்லூரி
1896 இல் ஸ்தாபிக்கப்பட்டு!
கல்வியையும் ஒழுக்கத்தையும்
அள்ளி அள்ளி கொடுத்த
சிதம்பரா படிப்படியான
பரிணாம வளர்ச்சியை
எய்தியது!
ஆதியிலே சிறுதொகை
மாணாக்கர் கற்றாலும்!
காலஞ்செல்லச் செல்ல
மாணாக்கர் வருகை
அதிகரிக்க!
சிதம்பராவின் புகழ்
பற்பல இடர்களைத் தாண்டி
தேசிய ரீதியாக வியக்க வைக்கும்
சாதனைகளைப் புரிந்தது
சரித்திரம் படைக்க பல
சாதனை நாயகர்கள்
இப்பள்ளி தனிலே!
அவதாரம் எடுத்தனர்
சிதம்பராவின் பெருமைதனைக் கண்டு
ஞாலமே ஒரு கணம்
ஆடிநின்றது!
இக்கணம் சிதம்பரா உச்சக் கட்ட
வளர்ச்சிதனை எய்தும் வேளை!
தமிழர் தாயகத்தை
அழிப்பதற்காகப்புறப்பட்ட

கொடூர வெறி பிடித்த
மாந்தர்கள்!
வல்வை மண்ணில் பிரவேசித்து
மாரிமழை பொழிவதைப் போல
குண்டு மழையாக பொழிய
அங்கும் இங்கும் மாந்தர்கள் சிதறி ஓட!
பல்லாயிரம் மாணவர்களைக் கொண்டு
சிகரம் தொட்ட சிதம்பரா!
56 மாணக்களுடன் தத்தளித்து
காலந்தனை ஒட்டியது!
விழவு வரும் விழுவு வரும்! என்று
எண்ண
“சமாதானம்”மலர்ந்தது
அங்கும் இங்குமாக சிதறி ஒடிய மக்கள்
மீண்டும் வல்வைதனில் கால்பதிக்க!
புத்துயிர் பெற்றது
சிதம்பரா!
பலநூறு மாணக்கர்
கல்விதனைக் கற்க
ஒடோடி வந்தனர்
கல்வியும் இனிதே வளர்ந்து!
பற்பல சாதனைகளை
நிகழ்த்த
மீண்டும் 2006இல்
ஏ9 சாலை மூடப்பட!
யுத்தம் முளைவிடத்தொடங்கியது
மாணக்கர் தொகை
மீண்டும் ! படிப்படியாக குறைந்து
350 மாணக்கருடன் இன்று
பரிதாபமாக இயங்கினாலும்
சாதனைகள் குறையவில்லை!
பற்பல சோதனைகளைத் தாண்டி
சாதனை படைத்த
சிதம்பரா இன்று
யுத்தத்தின் பிடியால்
மீண்டும் புதைகுழிக்குள்
செல்லுமோ? என
தினம் தினம் அஞ்சுகிறன்
இத்துயர் போக்க
“சுபீட்சம்” கிடைக்க
வேண்டும்!



## அழகு

கண்ணுக்கு மை அழகு
கவிதைக்கு பொய் அழகு
அன்னைக்கு அன்பு அழகு
காந்திக்கு அகிம்சை அழகு
உயர்ந்தோர்க்கு பணிவு அழகு
சான்றோர்க்கு சால்பு அழகு
பள்ளிக்கு கல்வி அழகு
பாரிற்கு இயற்கை அழகு
படித்தோர்க்கு பண்பு அழகு
பாவைக்கு அகம் அழகு
மாந்தர்க்கு குணம் அழகு
நட்புக்கு மெய் அழகு
காக்கைக்கு குஞ்சு அழகு
இளையோர்ககு உறுதி அழகு
பாட்டுக்கு பாரதி அழகு
வாக்குக்கு வள்ளுவன் அழகு
கவியிற்கு கம்பன் அழகு
கலையிற்கு தேனி அழகு
தனிமைக்கு தவம் அழகு
தமிழனுக்கு தமிழே அழகு



## நான் என்ன செய்வேன்?

தேர் இழுக்க வந்த திருக்கூட்டம் போல
ஊர் சூழ வந்து நிற்க மங்களமாய்
என் திருமணம் ஊர்போற்ற நடந்தது
ஆண்டு பல வாழ்க என வாழ்த்துக்கள் குவிந்தன

இரண்டு நாட்கள் மங்களமாய் சென்றது
மூன்றாம் நாள் காணவில்லை என் கணவனை
மங்கள நாட்கள் எல்லாம் அமங்கல
நாட்களாக மாறி தினம் குமுறுகிறேன்

இற்றை வரை இரண்டு ஆண்டுகள் கடந்தும்
என் கணவன் எங்கு சென்றாரோ! ஏது ஆனாரோ!
தினம் தினம் மனித உரிமையில் முறையிட்டும்
பயன் ஏதும் இதுவரை கிட்டவில்லை

கணத்துக்கு கணம் தனிமையில் வாடுகிறேன்
சமுதாயம் என்னை வேறாக உற்று நேக்குகின்றது
எனக்கு மட்டும் நிகழ்ந்த அவலம் அல்ல இது
பலருக்கு நடந்தும் நீதி கிடைக்கவில்லையே
நான் என்ன செய்வேன்?



## இறைவா...

தினம் தினம் உதிர வெள்ளத்தில்
மனம் உடைந்து வாழ்கின்றோம்
நீதியை மதித்து வாழ்ந்த நம்கு டிக்கு
அநீதி விளைவதன் காரணம் என்னவோ?

சுதந்திரம் எனும் போர்வையிலே தமிழனை
சுட்டழிப்பதன் காரணம் தான் என்னவோ?
உரிமை எனும் பெயரிலே உரிமைகளை
மதிக்க தவறுவதன் காரணம் என்னவோ?

மானிடனாய் இந்நாட்டிலே பிறந்தது தவறா? இல்லை
தமிழனாக பூமியிலே பிறந்தது தவறா?
தினம்தினம் உனைப் பிரார்த்தித்து
விழவிற்காக காத்திருக்கிறோம் பதில் கூறுவாயாக

## நாகரிக மங்கைகள்

மஞ்சள் குங்குமமும் மணமணக்கும் மல்லிகையும்
பட்டுத்தாவணியும் பண்பான உடையும்
இன்று எங்கு சென்றதோ யார் அறிவார்
நாகரிகம் என்ற பெயரில் பெண்ணின் நிலைதான் என்ன?

தாய் உறவை உதாசீனம் செய்து
தொப்புள் தெரியத் தெரிய போடும் மேலாடையும்
முட்டங்கால் கிழிய கிழிய தொடைகாட்டும்
கீழ் ஆடையும் ஆடையா? சொல்லுங்கள்

கொஞ்சி இழுக்கும் மஞ்சள் குங்குமத்தை
புறந்தள்ளி குமட்டுகின்ற "பெயரன்ட் லவ்லி" யை
முகந்தனில் அழுத்துவதன் காரணம் என்னவோ
நாகரிகம் என்ற பெயரில் ஏன்? இத்தனை மாற்றங்கள்


அம்மா, அப்பா என்ற இனிய தமிழ் மறந்து
மம்மி, டாடி என்ற மடமை மொழி ஏன்?
நாகரீக மங்கைகளே! காலங்கள் மாறினாலும்
தமிழும் தமிழ் பண்பாடும் மாறக்கூடாது.

## சிறுவயதில் திருமணம்

பள்ளிப் பருவமதிலே!
கற்கும் வயதுதனில்
சின்னஞ் சிறு பிள்ளைகளை
திருமணம் எனும் போர்வையிலே
வீழ்த்துவதன் காரணம் தான் என்னவோ?
பால் மணம் மாறாத பன்னிரண்டு வயது
சிறுமிதனை திருமணம் என்னும்
புதைகுழியில் வீழ்த்துவதன்
காரணம்தான் என்னவோ?
சாதிக்க வேண்டிய வயதில்
“சாக்கடைக்குள்” வீழ்த்தி
பெண்ணை மண்ணாக்குவதன்
காரணம் தான் என்னவோ?
மாறிவரும் விந்தை உலகில்
இது என்ன கொடுமை!
சிட்டுக்களாய் பறக்க வேண்டிய
வயதில்!
சிசுவைத் தாங்க வேண்டிய
பரிதாப நிலை!
பிரசவ காலமதில் உயிர்கூட
காலனின் கையில் அகப்பட்டு!
பரிதாபமாய் செல்கிறது
சிட்டுக்குருவி வயதில் திருமணம்
வேண்டாம்! வேண்டாம்!.. என்று
வைத்தியன் கூற
“செவிடன் காதில் ஊதிய சங்காக”
இருப்பதன் காரணம்தான் என்னவோ?
பெண்ணின் வாழ்வுதனை வீணேஅழிக்கும்
மடமை மாந்தர்களே!
சிந்தித்து பாருங்கள்!
சிகரத்தை அடயலாம்

### பிணம்

உயிர் மூச்சு உள்ள போது
தனித்தனி நாமம்
உயிர் மூச்சு பிரிந்த போது
வைக்கும் ஒரே நாமம்



### வெற்றி கொள்!

இடர் மேல் இடர் வந்தாலும்
சிலந்தி போல வாழ்ந்துவிடு!
சிகரத்தை எட்டினாலும்
சிந்தனையை தளரவிடாதே!
உன் இரு கைகள் இழப்பினும்
நம்பிக்கையை இழக்காதே!
வீரத்தமிழன் பெருமைதனை
வையகமெல்லாம் பரப்பிடுக.

### வேறுபாடு

ஏழையாக வாழ்ந்தேன் எந்தன்
கண்ணீரை துடைக்க யாருமில்லை
எட்டுமாடி வீட்டில் வாழ்ந்தேன்
எட்டாத சொந்தமெல்லாம் வருகிறது.

### குற்றம்

பாரினிலே நான் அவதரித்தது
குற்றமல்ல
தமிழனாக நான் அவதரித்ததே
குற்றம்

### அஞ்சுகிறேன்

அன்று மிருகத்தை கண்டு
அஞ்சினேன்
இன்று மாந்தனை கண்டு
அஞ்சுகிறேன்

### ஆசையும் பேராசையும்

ஆசை"என்ற இரண்டெழுத்து
ஆக்கத்தை தரும்
"பேராசை" என்ற மூன்றெழுத்து
அழிவைத்தரும்

## கேட்டேன்

இருள் அகன்ற ஒளியைக் கேட்டேன்
இணையில்லாத புன்னகை கேட்டேன்
இருக்கும் வரைக்கும் நிம்மதி கேட்டேன்
இனிக்க இனிக்க உறவுகள் கேட்டேன்

குணத்தை மதிக்கும் மாந்தனை கேட்டேன்
குழுசைகள் இல்லா உலகம் கேட்டேன்
குமுறும் மனதிற்கு நீதி கேட்டேன்
குற்றம் இல்லா ஞாலத்தை கேட்டேன்

மருத்துவம் அற்ற உலகை கேட்டேன்
மண்ணில் தினம் தினம் பிறக்க கேட்டேன்
மனத்தின் முன்னே ஒளியைக் கேட்டேன்
மனிதர்க்கெல்லாம் சுதந்திரம் கேட்டேன்

தனிமையில் என்றும் வாழக்கேட்டேன்
தர்மம் என்றும் நிலைக்க கேட்டேன்
தடைகள் இல்லா உலகை கேட்டேன்
தனிமைக்கெல்லாம் உறைவிடம் கேட்டேன்

துக்கம் மறைந்த வாழ்வை கேட்டேன்
துதிக்கும் கரத்தின் மனங்களை கேட்டேன்
துப்பாக்கி இல்லா உலகம் கேட்டேன்
துன்பம் அகன்ற தமிழனைக் கேட்டேன்

ஆசையில்லா வாழ்வைக் கேட்டேன்
அன்புக்கு என்றும் அடைக்கலம் கேட்டேன்
ஆகாயத்தில் வாழக் கேட்டேன்
ஆயிரம் உறவில் தனித்துவம் கேட்டேன்

ஒற்றுமையான வாழ்வைக் கேட்டேன்
ஒன்றுபட்ட உலகைக் கேட்டேன்
ஒருமைப்பட்ட வாழ்வுதனைக் கேட்டேன்
நிறைவாய் எப்போதும் சுதந்திரம் கேட்டேன்

இத்தனை கேட்டும் நடக்க வில்லை
இனிமேல் நடக்க கேட்கின்றேன்.

## மீண்டும் நமக்கு வரவேண்டும்

ஊரெங்கும் மணி ஓசையாய்
உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளமாய்
ஒழய அன்றைய உழவர் திருநாள்
இன்று எங்கு போனதோ தெரியவில்லை
சிறுவர்கள் மகிழ்ந்திடவே
சின்னச் சிட்டுக்கள் பறந்திடவே
கொண்டாழய அன்றைய திருாள்
இன்று எங்கு போனதோ தெரியவில்லை
காதினிலே பட்டாசு ஓசையுமாய்
கையினிலே பொங்கலுமாய்
கொண்டாழய திருநாள்
இன்று எங்கு போனதோ தெரியவில்லை
கரும்புகளை இனிக்க இனிக்க
கவிபாழ உண்டு மகிழ்ந்த
அன்றைய உழவர் திருநாள்
இன்று எங்கு போனதோ தெரியவில்லை
மீண்டும் நமக்கு வரவேண்டும் !
அன்றைய இனிதான திருநாள்

## இலட்சியத்தை முதலில் காதல் கொள்


சாதிக்க வேண்டுமென புறப்பட்டேன்
கண் எதிரே நீ தோன்றினாய்
நீயே எந்தன் உலகம் உயிர் நாடி என்றேன்!
அது என் மடமைத்தனம் என்று புரிந்து கொள்ளவில்லை

உன்னையே நினைத்து கவி பாடினேன்
உன்னையே எண்ணி கற்பனை செய்தேன்
உன்னையே எந்தன் வாழ்க்கை என்றேன்
உன்னையே தினம் தினம் சுவாசித்தேன்

உன்னையே என் மனதில் நிறுத்திக் கொண்டேன்
உனக்காகவே என்றும் வாழ்வேன் என்றேன்
சாதிக்க வேண்டும் என்று அன்று நினைத்தேன்
இன்று என் சாதனை எல்லாம் சோதனையாக மாறிவிட்டது

உன்னை நினைத்தபோது நான் சாதிக்க
நினைத்தவை எல்லாவற்றையும் நினைக்க வில்லை
உன்னை வெண்மதி என்றேன் இன்று வெட்கப்பட்டு
தலைகுனிந்து பிச்சையெடுக்கிறேன் உன்னாலே!

இலட்சியத்துக்கு காதல் முட்டுக்கட்டையாக
அமையக் கூடாது என்பதை புரிந்து கொள்ளுங்கள்.



## புதுமைப் பெண்கள்

கண்ணே ! மணியே ! முத்தே என்று
ஆசைகாட்டி விட்டு
மோசம் செய்யும் ஆண்களே
காதலித்த பெண்ணை கரம்பிடிக்க
கல்யாணச் சந்தையிலே சீதனம்
கேட்கும் சீதனவாதிகளே!
உங்களை அழிக்க
புறப்பட்டு விட்டார்கள்
புதுமைப் பெண்கள்
சமவுரிமை என்று சொல்லிக் கொண்டு
பெண்களை "சாக்கடைக்குள்" வீழ்த்தும்
புதுயுக ஆண்களே
உங்களை அழிக்க புறப்பட்டு
விட்டார்கள் சாதனைக் பெண்கள்
வீட்டுக்குள் இருந்த காலம் போய்
விண்வெளியில் ஆய்வு செய்யும்
காலம் வந்தும்
இன்னும் மாறவில்லையே இப்
பரிதாபத்திற்குரிய ஆண்கள்

## தமிழை மறவாதே!

தமிழிற்கு அமுதென்று பெயர்
அத்தமிழின்ப தமிழ் எங்கள்
உயிருக்கு நேர் என பாரதிதாசன்
கவியதனிலே அழகாக கூறுகிறான்

ஞாலமதில் போற்றும் மொழிதனிலே
தமிழ் மொழியே சிறந்தது
மூவேந்தர் பின்பற்றியதும் தமிழே!
மூவுலகம் போற்றுவதும் இனிய தமிழே!

வள்ளுவன் கூறிய வாக்கும் தமிழே!
முத்தமிழ் வித்தகர் கற்றதும் தமிழே!
கவிதனை அழகாக பாடுவதும் தமிழே!
அற்புத வரலாற்றை கூறுவதும் தமிழே!

குழக்க நீரிலாக் கொடுமை வரினும்
கட்டுடல் மெலிந்து கண் பஞ்சடையினும்
விட்டுயிர் பிரியும் நேரம் எய்தினும்
இதந்தரும் எல்லாம் இழப்பினும்
தமிழை மறவாதே!

## நண்பன்

விழி மூடி விழி திறக்க முன்
களவு போகும் இக்காலத்தில்
விழியை திறந்திருக்கும் போதே
என் இதயமெனும் மனதை திருடிய
திருடன் அல்லாவா நீ!

## அருமை

நிழலின் அருமை
வெயிலில் தெரியும்
குடையின் அருமை
மழையில் தெரியும்
கல்வியின் அருமை
கற்காத போது தெரியும்
நட்பின் அருமை
பிரிவில் தெரியும்
ஒளியின் அருமை
இருளில் தெரியும்
கண்ணின் அருமை
குருடில் தெரியும்
நன்மையின் அருமை
தீமையில் தெரியும்
இன்பத்தின் அருமை
இடரில் தெரியும்
உறவின் அருமை
தனிமையில் தெரியும்
நல்லவனின் அருமை
தீயவனில் தெரியும்



## நல்வாழ்வு கிடைக்குமா?

எழில் கொஞ்சும் வல்லையிலே
சிட்டுக்கள் பறந்திட மொட்டுக்கள் மகிழ்ந்திட
இனிதாய் சென்ற அன்றைய நாளும்
கடற்கரைதனிலே தென்றல் காற்றும்
மெல்லிய மௌனப்பேச்சும்
இனிக்க இனிக்க உண்டு மகிழ்ந்த
அன்றைய நாளும்
சிரிப்பொலியின் சத்தம் சிகரமாய் விளங்க
சிந்தனைக் கவிகள் பாடிய
அன்றைய நாளும்
துன்பம் என்ற சொல்லுக்கு அர்த்தம் புரியாமல்
இருந்த அன்றைய நாளும்
சரித்திரம் படைத்த சாதனை நாயகர்கள்
வாழ்ந்த அன்றைய நாளும்
இன்று எங்கு போனதோ தெரியவில்லை
சுதந்திரம் எனும் போர்வையிலே
கூண்டுக்கிளியாக வாழும் இன்றைய நாளும்
கடற்கரைதனிலே தென்றல் காற்றோடு
கவி பாட முடியாத இன்றைய நாளும்
சிரிப்பொலியின் சத்தம் சீரழிந்து
சிதறிக்கிடக்கும் இன்றைய நாளும்
ஊரடங்கு முன்பே ஊரடங்கு
சட்டம் போடும் இன்றைய நாளும்
எப்போது மாறுமோ தெரியவில்லை
நல்வாழ்வு கிடைக்குமென
நம்பிக்கையோடு வாழ்வோம்! வெல்வோம்!



**அழியாதது எது?**

பந்தங்கள் ஒரு நாள் பறந்து போகலாம்
உறவுகள் ஒருநாள் ஒழப்போகலாம்
இன்பங்கள் ஒருநாள் மறைந்து போகலாம்
துன்பங்கள் ஒருநாள் களைந்து போகலாம்

உதிக்கும் சூரியன் மறைந்து போகலாம்
இருக்கும் நிம்மதி சிதைந்து போகலாம்
மனிதனின் குணஇயல்பு மாறிப் போகலாம்
அன்பு கொண்ட நெஞ்சம் அழிந்து போகலாம்

பண்பு கொண்ட மாந்தர் இறந்து போகலாம்
பார்கூட ஒரு நாள் உடைந்து போகலாம்
மனிதனின் இருதயம் கூட இல்லாமல் போகலாம்
நினைத்தது எல்லாம் நடந்து போகலாம்

நினைத்தவை சில நடந்து போகலாம்
இவ்வுலகம் ஒரு நாள் பணிந்து போகலாம்
ஆனால் எக்காலத்திலும் அழிந்து போகாதது
நட்பு! நட்பு! நட்பு! மட்டுமே

## புரிந்து கொள்ளடா புது மனிதா

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கடந்தும்
மானிடச் சமுதாயம் என்னும் – மாறவில்லையே
எத்தனை எத்தனை பற்பல சாதனை
படைத்தாய் ! மானிடா
ஒற்றுமை என்னும் சாதனை படைத்தாயா?
சோதனை வேதனையை தாண்டி
சாதனை படைத்த புதுமனிதா!
நீ என்றோ ஒருநாள் மடிந்து போகப்போகிறாய்
அகந்தையை அழமனதில் வைத்துக்கொண்டு நீ
பெருமிதமடைகிறாய்
விஞ்ஞான விந்தை என்று பூமியை அழிக்கின்றாய்
பூமி உனக்கு சொந்தமா? ஒருகணம் சிந்தித்துபார்
இயற்கையை அழிக்கும் உன்செயல்
கருவறையில் சிசுவை கொலைசெய்வது போல்
அல்லவா இருக்கிறது
இயற்கையை வளர்ப்பதில் சங்ககாலத்தில்
சாதனை படைத்த புது மனிதா!
மிலேனியம் காலத்தில் செயற்கையை
வளர்ப்பதில் தான் சாதனை படைத்துள்ளாய்
அல்லவா!
இயற்கையை நீ அழித்தால்!
இயற்கையால் நீ அழிவாய் என்பதை
புரிந்து கொள்ளடா புதுமனிதா.

## என் ஓய்வுற்ற ஆசானுக்கு

இன்பமெனும் பெருக்கெடுத்து
இதயமெனும் கோயில்கட்டி
இத்தனை ஆண்டுகள் உன்
கல்விச்சேவையைப் புரிந்தாய்
இன்று ஓய்வு பெறும் செய்தி
கேட்டு வேதனை அடைகின்றோம்.
பள்ளிக் குழந்தைகளை அன்பால்
அடக்கி அன்னை போன்று பாதுகாத்தாய்
நீங்கள் கற்பிக்கும் திறனை பார்த்து
அகிலமே வியந்து நின்றது
அன்பெனும் ஊற்றெடுத்து
அன்புச்செல்வங்களை வளப்படுத்தினீர்கள்
இன்று ஓய்வுற்று இருக்கிறீர்கள்
நீங்கள் பல்லாண்டு காலம் அன்போடு
வையத்துள் வாழ்வாங்கு
வாழ வாழ்த்துகிறோம்



## துயரில் தமிழன்

இரத்தம்.. ! இரத்தம்.. ! இரத்தம்.. !
தமிழனது வாழ்வுதனை அழிக்க வந்த இரத்தம்!
பித்தம்.. ! பித்தம்.. ! பித்தம்..!
கொடூர மாந்தரின் தலைக்கேறியது பித்தம்..!

சத்தம்.. ! சத்தம்.. ! சத்தம்.. !
வடபகுதியெங்கும் அழுகுரலின் சத்தம்.. !
யுத்தம்.. ! யுத்தம்.. ! யுத்தம்.. !
தமிழன் வாழும் இடமெல்லாம் யுத்தம்.. !

அர்த்தம்.. ! அர்த்தம்.. ! அர்த்தம்.. !
தமிழன் செயல் ஒவ்வொன்றிலும் அர்த்தம்.. !
சித்தம்.. ! சித்தம்.. ! சித்தம்.. !
தமிழன் மனதில் என்றும் மெய்ஞ்ஞான சித்தம்.. !

### ரோஜாவின் ஆணவம்

எழில் கொஞ்சும் தோட்டமடா நான்
கண்ட பூந்தோட்டம்
அத்தோட்டத்தில் எனக்கு மிகப்
பெரிய நாட்டம்
அங்கே கண்ணைக்கவரும் வகையில்
ரோஜாத் தோட்டம்
அதைக் கண்டு என்மனம் ஆடியது
பேராட்டம்
ரோஜாவின் அழகைப் பார்க்க அங்கு வந்தது
மாபெரும் கூட்டம்
செந்நிற ரோஜாவைப் பார்க்க வந்தது
குமரிக் கூட்டம்
அமைதியைத் தேடித் தரும்
அந்த தோட்டம்
தலைகுனிந்து பார்க்குமாம் வர்ண
அழகு பட்டம்
அங்கு வந்தோர் மனதில் அன்பு
மலர்க்கோட்டம்
என் கண்களில் வந்தது ஆனந்த
கண்ணீர் ஓட்டம்
ஆயிரம் கண்கள் அதன் மீது
கொண்டது நாட்டம்
இதனால் ஆணவம் கொண்டது
ரோஜாக் கூட்டம்
மற்றப் பூக்களைப் பார்த்து
தட்டியது மட்டம்
தன்னை வெல்பவர் யாருமில்லை என்று
அடித்தது கொட்டம்
இதனால் மறுநாள் வாடியது
ரோஜாக் கூட்டம்
ஆணவம் கொண்டவன் அழிவான் என்று
கூறியது வாடா மல்லிகைக் கூட்டம்.

## 2050 இல் உலகம் எப்படி இருக்கும்

கண்மூடி கண்திறக்கும் முன்பே விந்தை
கண்ட இவ்வுலகு 2050 இல் எப்படியிருக்கும்?
குடிசைகள் இருக்காது! தனிவீடுகளும் இருக்காது
பல மாடி கொண்ட மாளிகைகள் இருக்கும்

ஆலயங்கள் இருக்கும்! தெய்வமும் இருக்கும்
மாந்தர்க்கு வணங்க நேரம் இருக்காது
பணம் இருக்கும் ! குணம் இருக்காது
மனம் இருக்கும்! மகிழ்வு இருக்காது


பசி இருக்கும்! உணவு இருக்காது
நீர் இருக்கும் ! குடிநீர் இருக்காது
வெயில் இருக்கும்! மழை இருக்காது
மலை இருக்கும்! பனிமலை இருக்காது

செயற்கை இருக்கும்! இயற்கை இருக்காது
மாந்தன் இருப்பான்! ஒற்றுமை இருக்காது
சோதனைகள் இருக்கும்! சாதனைகள் இருக்காது
தமிழன் இருப்பான்! தமிழ் இருக்காது

## வாழ்வுதனைத் தேடி.........



பள்ளிப்பருவமதிலே!
கற்கும் வயதுதனில்
இவன் வேலைக்கு செல்வதன்
காரணம்தான் என்னவோ?
அப்பனோ குடிகாரன்,
அம்மையோ அப்பந்தனை சுட்டு
நாவிரண்டு பிள்ளைகளை
எப்படித்தான் வளர்ப்பது?
தினம் தினம் போதையில் வரும்
அப்பனால் "குடும்ப அட்டையில்"
அங்கத்தவர் தொகையும்
அதிகரிக்க!
திக்குமுக்காடுகிறது குடும்பம்
கூலிக்குச் செல்லும் அப்பனோ
தினம் கைவீசி வருகிறான்
அம்மையின் பொன் தாலியும்
மஞ்சள் கயிறாக மாறிவிட!
காதுக் கம்மலும் காணாது போக
இவள் ஆணோ என்று
எண்ண வைக்கிறது.
பிள்ளைகளோ எட்டு – அதை
வளர்ப்பதற்காய்ப்பாடுபட்டு!
நெஞ்சமதைத் தொட்டு!
விடிவு வருமோ ! வருமோ! என்று
வினாடிக்கு வினாடி குமுறுகிறாள்
இந்நிலையில் மூத்த மகனின் வயதோ பத்து!
இவன் வேலைக்குச் செல்கிறான்
தன் குடும்பத்தின்
வாழ்வுதனைத் தேடி....



## இருண்ட விளக்கு

ஊரெங்கும் ஒளி விளக்கு
பாரினிலே பவள விளக்கு
அனைத்திற்கும் சூரிய விளக்கு
நாம் இங்கு இருண்ட விளக்கு

### அழிவு

மனிதனின் "வேட்டை"
ஒசோனில் "ஓட்டை இதனால்
நான் படும் "பாட்டை" கூறினால்
வீழ்வதோ "சாட்டை"

### பணம்

"சாவை"த் தேழ அழைக்கிறாள்
வறுமைக்கிழவி
"சாவோ" பணம் கொடு
வருகிறேன் என்றது

### பணத்தின் மதிப்பு

சாவின் விழிம்பில் அன்று
தத்தளித்தேன் யாரும் வரவில்லை
அன்று பணமில்லை
சாதா காய்ச்சலில் இருக்கின்றேன் இன்று
ஆயிரம் பேர் வருகிறார்கள்
இன்று பணமிருக்கிறது.



## காதல்

புதுப் புது முகங்களின் சந்திப்பு
காதல் என்றும்!
புரிந்து கொண்ட உள்ளங்களின் ஒன்றிணைவு
காதல் என்றும்!
புன்னகை மலர்ந்த பூரிப்பில் மலர்வது
காதல் என்றும்!
தாயின் மீது சேய் வைக்கும் அன்பு
காதல் என்றும்!
சேய் மீது தாய் வைக்கும் அன்பு
காதல் என்றும்!
தாய்நாட்டின் மீது குடிமகன் கொள்ளும் பற்று
காதல் என்றும்!
பள்ளி கற்றுத்தரும் கல்வியை நேசிப்பது
காதல் என்றும்!
பண்பு கொண்ட மாந்தர் இருவர் சந்திப்பது
காதல் என்றும்!
தாய்நாட்டுக்காக தன்னுயிர் கொடுப்பது
காதல் என்றும்!
அண்ணன் மீது தங்கை வைக்கும் அன்பு
காதல் என்றும்!
தமிழ் மீது தமிழன் வைக்கும் பற்று
காதல் என்றும்! கூறலாம்
அதை விட்டு காதல் என்ற சொல்லிற்கு
ஒற்றைக் கருத்தை எடுத்துக்கொள்ளும்
மூட மாந்தர்களே! புரிந்து கொள்ளுங்கள்!

## அமெரிக்காவில் "அன்னபூரணி "



ஆதிகால எழில் கொஞ்சும்
வல்வைதனிலே!
எத்தனை ! எத்தனை !
சிறப்புக்கள்
பாரே போற்ற !
வையகம் வாழ்த்த
வல்வையின் சிறப்பில் !
"கப்பல் கட்டுதலும்" ஒன்று
வல்வைதனின் மைந்தன்
என்றுமே சலித்தவன்
அல்ல!
கடல்தனில் சென்று
கடலினையே ஆளும்
வீர மைந்தனும்
வல்வை மைந்தனே!
எண்ணற்ற கப்பல்கள்
வியக்க வைக்க
ஒவ்வொன்றும் அழகாய்
மலர்ந்தது!
அதில் ஒன்று தான் "அன்னபூரணி"
"அன்ன பூரணி" எனும் நாமங்கொண்டு
அமெரிக்காவை
வியக்க வைத்தது என்றால் !
நம்ப முடியுமா?
வல்லரசில் !
வல்லரசு !
அமெரிக்கா
அமெரிக்காவையே திகைக்க
வைத்தது "அன்னபூரணி "
வல்வையின் மைந்தர்களால்
உருவகம் எடுத்து
வேம்பு, இலுப்பை என்பவற்றால்

கட்டி எழுப்பப்பட்டு
"89" அடி நீளமதைக் கொண்டு
சிறப்புற்று விளங்கியது
"அன்னபூரணி"
வல்வையின் கப்பல் "வல்லரசை"
கலக்கியது எப்படி?
வெள்ளையரின் ஆட்சிதனிலே!
வல்வை முடங்கிக் கிடந்தது
அக்கணம் கோடான கோடீஸ்வரர்
"அல்பேட் றொமின்சன் "
வல்வைதனிலே !
விஜயம் செய்த போது
வல்வையின் துறைமுகத்தை
காணவந்து "அன்னபூரணி " கண்டு
வியந்து நிற்க !
தன்னாடு கொண்டு செல்ல
ப்ரியப்பட்டு !
அறுபதாயிரம் விலை கொடுத்து
"அன்னபூரணியை "யை தன்வசமாக்கி
அமெரிக்கா சென்றபோது
"அன்ன பூரணி " யை காண
பல்லாயிரம் மாந்தர்கள்
சூழ நின்று வியந்து
பார்த்தனர்
வல்லரசையே வியக்க
வைத்த பெருமை
வல்வை மைந்தனையே சூழுகிறது.
வல்வைதனின் புகழ் என்றும்
அழியாது!

## தொ(ல்)லைபேசி



தொலை பேசி என்பது
தொலைவில் உள்ளவரிடம்
பேசுவது இன்று
இரண்டு "மீற்றர் "
தூரத்தில் நடக்கிறது
சம்பாசணை
கைத்தொலைபேசியில்!
காலம் கெட்டுவிட்டதா?
இல்லை
மாந்தன் கெட்டுவிட்டானா?
என்பது புரியாத புதிராக
இருக்கிறது
உந்துருளியில் செல்லும் போதும்
உல்லாசமாய் பேசுகிறான்
உனக்கு ஏதாவது நடந்தால்!
காப்புறுதி என்கின்றான்
மணிக்கணக்கில் தயங்காது
பேசுகிறான்
"பில் " வந்ததும் மயங்கி
விழுகிறான்.
வெகு நேரம் கதைத்தால்
"புற்றுநோய் " என்கிறான்
விஞ்ஞானி
விசரன் ஏதோ சொல்கிறான்
என்று மீண்டும் கதைக்கிறான்
செல்போனில்
"பள்ளி "க் குழந்தையிடமும்
செல்போன்!
"பல் " இல்லா பாட்டியிடமும்
செல்போன்!
கற்கும் மாணவர்க்கு

செல்போனை கொடுத்து
பழு! பழு! என்கிறார்கள்
பெற்றோர்கள்
அவன் பழக்கிறேன் என்று
சொல்லிக்கொண்டு
இணையத்தில் இடைவிடாது
பார்க்கிறான் "நீலப்படம்"
"கிளைமோர் " வெடித்தாலும்
கிளுந கிளுந என்று பேசுகிறான்
செல்போனில் !
"கிபிர் " அடித்தாலும்
"கிஸ் " கொடுக்கிறான்
செல்போனில் !
பாவம் செல்போன் என்ன
கொடுமை செய்ததோ?
யார் அறிவார் !
"பில்கேட்ஸிடம் " இருப்பதும்
செல்போன் !
"பிச்சை"க் காரனிடமும்
செல்போன் !
விஞ்ஞான விந்தை என்று
தொலைபேசியெல்லாம்
தொல்லையாக மாறிவிட்டது.
இந்நிலைக்கு "கிரகாம பெல் "
காரணமோ? இல்லை
விஞ்ஞான விந்தை காரணமோ?
யார் அறிவார் !

## தொல்லைதரும் "மெகாத் தொடர் "



அந்திப் பொழுது ஆயிற்று !
"ஓ" என்ற அழுகுரலின் சத்தம்
ஒவ்வொரு வீடுதனிலும்
ஓயாது ஒலிக்கின்றது
இழவு ஏதாவது நடந்ததோ?
இல்லை ! இழவை விட
மோசமான "மெகாத்தொடர்
வியக்க வைக்க
தினம் தினம் வீடுதனில்
கண்ணீரால் அரங்கேறுகிறது
"மெகாத் தொடர் "
இரவுதனிலே ஆசையோடு
கல்விதனைக் கற்க
அன்பு மகள் அன்னையிடம்!
ஓடி வருகிறாள்
அன்னையோ மகளே!
"ஆனந்தம் " முடிய வருகிறேன்
என்கிறாள்
அம்மா "ஆனந்தம் " முடிந்தவிட்டது
வாங்கோ படிப்போம் என்று கூற
அடுத்தபேச்சாம்
"சிவசக்தி " முடியும் வரை
பார்ப்போம் என்கிறாள்
நேரமோ பத்தரை
மகளோ நித்திரை
அன்னை தட்டி எழுப்புகிறாள்

மகளே! வா படிப்போம் என்று
பிஞ்சுக்குழந்தைக்கு பத்தரை மணிக்கு
எப்படி படிப்பேறும்?
நீங்களே சொல்லுங்கள்
மறுநாள் விடிந்ததும்
அவசர அவசரமாக "ஆபிஸ் "
சென்றுவிட்டார் கணவர்
பிள்ளையும் பள்ளிக்கு செல்ல!
அன்னை தன் வேலையை
தொடங்குகிறாள்!
சமையல் வேலையா? இல்லை
"மெகாத்தொடர் " பார்க்கிறாள்
பசியோடு கணவனும், மகளும்
களைப்புற்று வந்து உணவு கேட்க!
என்ன செய்வது ஏது செய்வது என்று
புரியாமல் போசாக்கற்ற
உணவுதனை உடனடியாக
வெந்ததும் வேகாததுமாய்
சமைத்துக்கொடுக்கிறாள்
அவர்களும் அதனை தினம் உண்டு
காலம் அப்படி இப்படி என்று
கடந்து செல்ல
மகளையும் இழுக்கிறது
"மெகாத்தொடர் "
கல்வியும் வீணேஅழிந்திட!
போசாக்கற்ற உணவுதனை
உண்டதால் கணவனும்
வீணே மடிந்துவிடுகிறான்
அக்கணம் அழுகிறாள் மனைவி!
கணவனை நினைத்தோ? அல்லது
"மெகாத்தொடரிலே " வந்த
காட்சிதனை நினைத்தோ?
யார் அறிவார் !

## புறப்படுங்கள் புதுமைப்பெண்கள் !

ஆண்மகன் ஒருவன்
பூமியிலே அவதரிக்க
வேண்டுமென்று
கோயில் பல சென்று
முட்டி வணங்குவது
எதற்காக?
பெண்மகள் அவதரித்தாள்
"கள்ளி "ப்' பால்தனை
பருக்கி அழிக்கிறீர்களே
எதற்காக?
ஆண்மகன் ஈன்றால்
ஊர் கூடி தேர்
இழுக்கிறீர்களே
பெண்மகள் ஈன்றால்
கண்ணீரில் மிதப்பதன்
காரணம்தான் என்னவோ?
சீதனத்தை வேதனமாக
கொடுக்க வேண்டுமென்று
அஞ்சுகிறீர்களா?
பெண்ணினமே....?
நீங்கள் எதற்கு சீதனம்
கொடுக்க வேண்டும்
சீதனம் கேட்கும்
சீதனவாதிகளை சிறைபிடித்து
சாதனை புரியுங்கள்!
சாதனை என்றால் அது
ஆண்களா?
இல்லை! இல்லை !
நீங்களும்தான்
சாவின் விழிம்பில்

நீங்கள் நின்றது
மலையேறிய காலம்
அடுப்பின் மத்தியில்
நெருப்போடு வாழ்ந்தது
போதும் வாருங்கள்
செல்வோம்....?
சாதனை சிகரத்துக்கு
நாலுபேர் சாதித்தால்
அது சாதனையல்ல
நானிலப் பெண்கள்
முழுவதும் சாதிக்க
வேண்டும்?
சாதனைக்கு "சானியாமிர்ஷா "
மட்டும்தானா?
அழகிக்கு "ஐஸ்வர்யாராய்"
மட்டும்தானா?
விண்வெளிக்கு "கல்பனாசால்வா "
மட்டும்தானா?
ஏன்?
உங்களால் முடியாது?
முயன்றவர் எவரும்
இதுவரை தோற்றதில்லை
தோற்கப் போவதுமில்லை
என்பதை ஞாலமறிய
கிளர்ந்து வாருங்கள்!
நீங்கள் "கிளைமோர் "
அல்ல
மாபெரும் அணுகுண்டு
என்பதை நிரூபிக்க
இக்கணமே புறப்படுங்கள்!
புதுமைப்பெண்கள்.



*மு.ஆ.சுமன்*

## இவர் பற்றி

யாராலும் "கவிஞனை" உருவாக்க முடியாது. கவித்துவம் இருந்தால் அவனே உருவாகிவிடுவான். இனிய புன்னகையிலும் துன்பக்கண்ணீரிலும் கவிதை பிறக்கும். வாழ்வுக்கு எல்லைகள் உண்டு. நிலையானதும் இல்லை. ஆனால் நம் கனவுகளோ எல்லையற்றவை. கனவுகள் இருக்கின்றவரை கவிதைகள் உண்டு. கவிஞனும் பிறந்து கொண்டு இருப்பான்.

அதே போல் வல்லமை மிகு வல்வை மண்ணில் தோன்றிய வல்லவர் மத்தியில் இளம் கவிஞன் மு.ஆ.சுமனும் தோன்றியுள்ளார். மேற்கோள் காட்டிய சிலவரிகளைப் போல் இக்கவிஞனும் கவித்துவம் இருந்ததால் உருவாகி கவிகள் பல வடித்துள்ளார். இவர் எழுதிய முத்துப் போன்ற கவி ..விதைகளை ஒன்றாகக் கோர்த்து ஆரமாக (மாலையாக) தந்துள்ளார். இவரின் கவித்திறன் புதிது. கவித்துவம் புதிது. கவிவடிவம் புதிது.

இவரது கவித்திறன் கன்னி முயற்சி. இந்த "வாழ்வுதனைத் தேடி" என்னும் கவித்தொகுப்பு கனியாகி மக்கள் மனங்களிலும் நிலைத்து நிற்கும். இவர் இன்று மாணவனாக உள்ளார். மாணவராக இருந்துகொண்டே ஓர் ஆசிரியத்தன்மை கொண்டவராக, கவித்திறனை வளர்த்து உங்கள் முன்பு வைத்துள்ளார். இவரின் கன்னி முயற்சியாக இருந்தபோதும் பாவலன் பாரதியின் முதுமையைக் காணமுடிகின்றது. துணிந்தவனுக்கு தூக்குமேடையும் பஞ்சுமெத்தை என்பதுபோல் சுமனின் இம்முயற்சி என்றும் அவர்க்கு உயர்வைத் தரும்.

வாழ்வுதனைத்தேடி.. என்னும் தலைப்புடன் இவரது கவிதைகள் அனைத்தும் இயற்கையோடும் நிசங்களோடும் நுளைந்து ஓடுகின்றது. இவ்வளவு இளமை வயதில் முன்பு கரிகாலனின் நீதி வடிவினையும். சம்பந்தரின் ஞானவடிவத்தினையும் கண்டோம். இன்று கவிஞர் வல்வைச் சுமனின் கவி வடிவினைக் காண்கின்றோம். இவரின் கவி... விதைகள் மக்கள் மனதில் வேரூன்றி விருட்சமாக வளரும் என ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

07.09.2008

எழுத்தீபன்

மதுரன் கிறா(f)பிக்ஸ், & ஒவ்செற் பிறின்ரேர்ஸ்,
அல்வாய். தொ.பே: 021 226 3099.